## ஜனவரி – 11 – வியாழன்

**தூய லெயாந்தர்**

**நீர் உமது முகத்தை ஏன் மறைத்துக் கொள்கின்றீர்?திபா. 44:24**

---

### முதல் வாசகம் : 1 சாமுவேல் 4 : 1 - 11

அந்நாட்களில், இஸ்ரயேலர் பெலிஸ்தியருக்கு எதிராகப் போர் தொடுத்து, எபனேசரில் பாளையம் இறங்கினர். பெலிஸ்தியரும் அபேக்கில் பாளையம் இறங்கினர். பெலிஸ்தியர் இஸ்ரேயலருக்கு எதிராக அணிவகுத்துச் செல்ல போர் மூண்டது. பெலிஸ்தியர் இஸ்ரயேலரை முறியடித்து அவர்களுக்குள் நாலாயிரம் பேரைப் போர்களத்தில் வெட்டி வீழ்த்தினர். வீரர்கள் பாளையத்திற்குத் திரும்பிய போது, இஸ்ரயேலின் பெரியோர் கூறியது ”இன்று பெலிஸ்தியரிடம் நம்மை ஆண்டவர் தோல்வியுறச் செய்தது ஏன்? ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையை சீலோவினின்று நம்மிடையே கொண்டு வருவோம். அது நம்மிடையே வந்தால், நம் எதிரிகள்கையினின்று நம்மை காக்கும். ஆகவே வீரர்கள் சீலோவுக்கு ஆள்களை அனுப்பி கெருபுகளின் மீது வீற்றிருக்கும் படைகளின் ஆண்டவரது உடன்படிக்கைப் பேழையை அங்கிருந்து கொண்டு வரச் செய்தார் ஏலியின் இரு புதல்வர்களான ஒப்புனியும் பினகாசும் கடவுளின் உடன்படிக்கைப் பேழையோடு இருந்தனர். ஆண்டவரது உடன்படிக்கைப் பேழை பாழையத்திற்குள் வந்ததும், இஸ்ரயேல் அனைவரும் நிலமே அதிரும் அளவிற்குப் பெரும் ஆரவாரம் செய்தனர். இந்த ஆரவாரத்தை கேட்டதும் பெலிஸ்தியர், ”எபிரேயரின் பாளையத்தில் இப்பெரும் ஆரவாரமும் கூச்சலும் ஏன்? என்று வினவினர். ஆண்டவரது உடன்படிக்கை பேழை பாளயத்தினுள் வந்து விட்டது என்று அறிந்து கொண்டனர். அப்போது பெலிஸ்தியர் பேரச்சம் கொண்டு கடவுள் பாளையத்திற்குள் வந்துவிட்டார். நமக்கு ஐயோ கேடு! இதற்கு முன்பு இப்படி நேர்ந்ததே இல்லை! நமக்கு ஐயோ கேடு! இத்துணை வலிமைமிகு கடவுளிடமிருந்து நம்மை காப்பவர் யார்? இக்கடவுள்தான் எகிப்தியரைப் பாலை நிலத்தில் பல்வேறு வாதைகளால் துன்புறுத்தியவர்! பெலிஸ்தியரே! துணிவு கொள்ளுங்கள்! ஆண்மையோடு இருங்கள்! எபிரேயர் உங்களுக்கு அடிமைகளாக இருந்தது போல, நீங்களும் எபிரேயேருக்கு அடிமைகளாக ஆகாதபடிக்கு ஆண்மையோடு போரிடுங்கள்!” என்றனர். பெலிஸ்தியர் மீண்டும் போர் தொடுத்தனர். இஸ்ரயேலர் தோல்வியுற, அவர்களுள் ஒவ்வொருவனும் தன் கூடாரத்திற்கு தப்பியோடினான். அன்று மாபெரும் உயிர் சேதம் ஏற்பட்டது. இஸ்ரயேலருள் முப்பதாயிரம் காலாட்படையினர் மாண்டனர். கடவுளின் பேழை கைப்பற்றப்பட்டது. ஏலியின் இரு புதல்வர்கள் ஒப்பினியும் பினகாசும் மாண்டனர்.

**பதில்பாடல் :** உமது பேரன்பை முன்னிட்டு ஆண்டவரே எங்களை மீட்டருளும்.

### நற்செய்தி : மாற்கு 1 : 40 - 45

அக்காலத்தில் ஒரு நாள் தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து, ”நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று முழந்தாள் படியிட்டு வேண்டினார். இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், ”நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!” என்றார். உடனே தொழு நோய் அவரைவிட்டு நீங்க, அவர் நலமடைந்தார். பிறகு அவரிடம், ”இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், கவனமாய் இரும். ஆனால் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி, நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும். நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும்” என்று மிகக் கண்டிப்பாகக் கூறி உடனடியாக அவரை அனுப்பி விட்டார். ஆனால் அவர் புறப்பட்டுச் சென்று இந்தச் செய்தியை எங்கும் அறிவித்துப் பரப்பிவந்தார். அதனால் இயேசு எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ச் செல்ல முடியவில்லை. வெளியே தனிமையான இடங்களில் தங்கிவந்தார். எனினும் மக்கள் எல்லா இடங்களி லிருந்தும் அவரிடம் வந்து கொண்டிருந்தார்கள்.

**தியானம்:** எமது பிள்ளைகள் தமது தேவை ஒன்றை நிறைவேற்றுமாறு கேட்கும்போது “உனது தேவையை நீயே பூர்த்தி செய்துகொள்” என்று எந்தப் பெற்றோராவது கூறுவார்களா? எமது குழந்தைகள் எம்மீது வைத்துள்ள உறுதியான நம்பிக்கையால் அவர்களது தேவைகளை நாம் நிறைவேற்றுவோம் என எம்மிடம் வருகின்றார்கள். அவ்வாறாயின், தமது சாயலாக எம்மைப் படைத்துள்ள பரலோக தகப்பனில் நாம் எவ்வளவு ஆழமான நம்பிக்கை வைத்து வாழவேண்டும். அவ்வாறான நம்பிக்கையோடு ஆண்டவர் இயேசுவின் காலத்தில் கலிலேயாவில் வாழ்ந்த ஒரு தொழுநோயாளியை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். தனது சொந்த ஊரில் எவராலுமே தனது நோயைக் குணப்படுத்த முடியாதென அந்நோயாளி நன்கறிந்திருந்தது மட்டுமல்ல, அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு ஊருக்கு வெளியே வாழ்ந்திருந்தார். இருப்பினும், “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” (மாற்கு 1:40) என ஆண்டவர் இயேசுவில் அந்தத் தொழுநோயாளி வைத்திருந்த அசையாத விசுவாசம் மேலானது. பெற்றோரிலும் மேலான அன்பு செலுத்தும் ஆண்டவர் இயேசுவால் இவ்வாறான வேண்டுதலை எவ்வாறு தட்டிக்கழிக்க முடியும்?. அந்தத் தொழு நோயாளிக்குக் காட்டிய அதே அன்பையே இன்று 2018 வருடங்களின் பின்னரும் எங்கள் ஒவ்வொருவர் மீதும் ஆண்டவர் இயேசு அபரிதமாகப் பொழிகின்றார். ஆண்டவர் இயேசுவின் அகல, நீள, ஆழம் காணமுடியாத அன்பை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோமா? இவ்வுலக மாயக்கவர்ச்சிகளின் பின்னே அலைந்து எமது ஆன்மாவில் தொழுநோயாளியாக மட்டுமல்ல, ஆண்டவரின் சன்னிதியிலிருந்தும் விலகி நமது பாதையே சரியெனத் தப்பறைகளின் பாதைகளில் வாழ்ந்து வருகின்றோம். எனவே, ஆண்டவரை விட்டு விலகியவர்களாக எம்மை நாமே புறக்கணித்து வாழ்ந்துவரும் “தொழு நோயாளி” நிலையிலிருந்து வெளிவருவோம். “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று ஆண்டவர் இயேசுவை நோக்கி உரத்த குரலெழுப்பி மன்றாடுவோம். “நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக” என்று நிட்சயமாக எமக்கும் ஆண்டவர் இயேசு பதிலளிப்பார்.